முருகப்பெருமான் துணை

**மகான் காரி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.10.2023**, சனிக்கிழமை

1. ஞான அவதார அரங்கனே
ஞானிகளை பூஜிக்கும் முறையோடு
தானதரும பலம்தனையும் காட்டி
தவசியாக வாழும் தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது தரிவை திங்கள்
அய்நான்கு திகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 20 ம் நாள், 07.10.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் காரி நாயனார் யானும்
வழங்குவேன் உலக நலம் பெற
பாரதமே அரங்கன் அவதார
பரந்த நோக்ககம் அறியப்பட
4. அறியப்பட ஞான உலகாக
அனைத்திலும் மாற்றம் காணும்
வறுமை நிலை யாவும் விலகி
வளமான தேசம் ஆகும்
5. ஆகவே அரங்க மகானின்
அற்புதம் தனை அறிய
மிகையான மாற்றம் தனை
மக்கள் சமூகம் கண்டுத்தேறும்
6. தேறவே அரங்கன் மார்க்கம்
தெய்வ நெறிகாட்டும் மார்க்கம்
அறமோடு எங்கும் ஒப்புதல்
அகிலத்தில் கிடைத்திட மாற்றம்

7. மாற்றம் வள்ளல் வகையாக
மகான்களாக மக்கள் மாறும்
ஆற்றல் பெருகி உலகெல்லாம்
அதிசயம் அரங்கனால் நடக்கும்
8. நடக்கவே அரங்கனை பின்பற்றி
நடப்பில் இருப்பவர் எல்லாம்
அடக்கமாய் தொண்டாற்றியே
அரங்கன் நாம செபம் செய்தால்
9. செய்தாலே போதும் அப்பா
செகமதில் இவர்கள் யாவரும்
மெய்ஞான மேல் நிலை கூடி
மேலவர்களாக இணைவரப்பா
10. அப்பனே கலியினில் கிடைத்த
அரங்கனால் வரும் கடைசி வாய்ப்பு
தப்பாமல் பின்பற்றி தொடர்ந்து
தரணியோர் சுத்தநெறிபட வாழ்வு
11. வாழ்வை தயவுடன் கடைபிடித்து
வருங்காலம்தனில் தருமமதை
தாழ்விலா காக்கும் சக்தியாகிட
தரணியில் ஞானிகளாவது உறுதியப்பா
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—